**வரையறுக்கப்பட்ட சுயாதீன தொலைக்காட்சி ஊடக வலையமைப்பு - 2022**

-----------------------------------------------------------------------------------------------------

## 1. நிதிக்கூற்றுக்கள்

### 1.1 முனைப்பழியுள்ள அபிப்பிராயம்

வரையறுக்கப்பட்ட சுயாதீன தொலைக்காட்சி ஊடக வலையமைப்பின் 2022 திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதி நிலைமைக் கூற்று மற்றும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான விரிவான வருமானக் கூற்று, உரிமை மூலதனத்தில் மாற்றங்கள் கூற்று, காசுப்பாய்ச்சல் கூற்று மற்றும் முக்கிய கணக்கீட்டுக் கொள்கைகளின் பொழிப்பு உள்ளடங்கிய நிதிக்கூற்றுக்களிற்கான குறிப்புக்கள் என்பவற்றை உள்ளடக்கிய 2022 திசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிக்கூற்றுக்கள் 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தின் ஏற்பாடுகளுடன் சேர்த்து வாசிக்கப்படும் இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலைமைப்பின் 154(1) ஆம் உறுப்புரையிலுள்ள ஏற்பாடுகளுக்கு இணங்க எனது பணிப்பின் கீழ் கணக்காய்வு செய்யப்பட்டன. பாராளுமன்றத்திற்குச் சமர்ப்பிக்கப்பட வேண்டுமென நான் கருதுகின்ற எனது கருத்துரைகளும் அவதானிப்புக்களும் இந்த அறிக்கையில் காணப்படுகின்றன.

இந்த அறிக்கையின் 1.5 ஆம் பந்தியில் விபரிக்கப்பட்ட விடயங்களின் தாக்கத்தினைத் தவிர்த்து கம்பனியின் 2022 திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதி நிலைமையினையும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான அதனது நிதிசார் செயலாற்றலினையும் காசுப்பாய்ச்சலினையும் இலங்கை கணக்கீட்டு நியமங்களுக்கு இணங்க இணைக்கப்பட்டுள்ள நிதிக்கூற்றுக்கள் உண்மையாகவும் நியாயமாகவும் தருகின்றன என்பது எனது அபிப்பிராயமாகும்.

### 1.2 முனைப்பழியுள்ள அபிப்பிராயத்திற்கான அடிப்படை

இந்த அறிக்கையின் 1.5 ஆம் பந்தியில் விபரிக்கப்பட்ட விடயங்களை அடிப்படையாகக் கொண்டு எனது அபிப்பிராயம் முனைப்பழியுள்ளதாக்கப்படுகின்றது.

இலங்கை கணக்காய்வு நியமங்களுக்கு (எஸ்எல்ஏயூஎஸ்எஸ்) இணங்க எனது கணக்காய்வினை நான் மேற்கொண்டேன். அந்நியமங்களின் கீழான எனது பொறுப்புக்கள் எனது அறிக்கையில் நிதிக்கூற்றுக்களின் கணக்காய்விற்கான கணக்காய்வாளரின் பொறுப்புக்கள் பந்தியில் மேலும் விபரிக்கப்படுகின்றன. எனது முனைப்பழியுள்ள அபிப்பிராயத்திற்கான அடிப்படை ஒன்றினை வழங்குவதற்கு போதியளவும் பொருத்தமானதுமான கணக்காய்வுச் சான்றுகளை நான் பெற்றுக்கொண்டுள்ளேன் என நான் நம்புகிறேன்.

### 1.3 நிதிக்கூற்றுக்களிற்கான முகாமைத்துவத்தினதும் அவ் ஆளுகைக்கு உட்பட்ட தரப்பினர்களினதும் பொறுப்புக்கள்

நிதிக்கூற்றுக்களை இலங்கை கணக்கீட்டு நியமங்களிற்கு இணங்க தயாரித்து சரியாகவும் நியாயமாகவும் சமர்ப்பித்தல் மற்றும் மோசடி அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுக்களிலிருந்து விடுபட்ட நிதிக்கூற்றுக்களைத் தயாரிப்பதற்கு அவசியமானதென முகாமைத்துவம் நிர்ணயிக்கின்ற அத்தகைய உள்ளகக் கட்டுப்பாடுகள் என்பவற்றிற்கு முகாமைத்துவம் பொறுப்பாக உள்ளது.

நிதிக்கூற்றுக்களைத் தயாரிக்கும் போது, கம்பனி தொடர்ந்தியங்கும் எண்ணக்கருவொன்றாக தொடர்ந்து செயற்படுவதற்கான அதன் ஆற்றலினை மதிப்பீடு செய்தல், தொடர்ந்தியங்கும் எண்ணக்கருவுடன் தொடர்புடைய விடயங்களை பொருத்தமானவாறு வெளிப்படுத்துதல் மற்றும் முகாமைத்துவமானது கம்பனியை கலைப்பதற்கு கருதினால் அல்லது வேறு மாற்று வழி இல்லாவிட்டால் செயற்பாடுகளினை இடைநிறுத்த நடவடிக்கை எடுத்தால் தவிர தொடர்ந்தியங்கும் கணக்கீட்டு எண்ணக்கரு அடிப்படையினை பயன்படுத்துதல் என்பவற்றிற்கு முகாமைத்துவம் பொறுப்பாக உள்ளது.

கம்பனியின் நிதி அறிக்கையிடல் செயன்முறையை மேற்பார்வை செய்தல் அவ் ஆளுகைக்குட்பட்ட தரப்பினர்களின் பொறுப்பாக உள்ளது.

2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தின் 16(1) ஆம் பிரிவின் பிரகாரம் கம்பனியின் வருடாந்த மற்றும் காலரீதியான நிதிக்கூற்றுக்களை தயாரிக்கக்கூடியவாறு கம்பனி அதன் அனைத்து வருமானங்கள், செலவினங்கள், சொத்துக்கள் மற்றும் பொறுப்புக்கள் தொடர்பாக புத்தகங்கள் மற்றும் பதிவேடுகளை முறையாக பேணுதல் வேண்டும்.

### 1.4 கணக்காய்வு நோக்கெல்லை

மோசடி அல்லது தவறு காரணமாக ஏற்படக்கூடிய அனைத்துப் பொருண்மையான பிறழ் கூற்றுக்களிருந்தும் நிதிக்கூற்றுக்கள் விடுபட்டுள்ளனவா என்பதற்கான நியாயமான உறுதிப்பாட்டைப் பெற்றுக்கொள்வதும் எனது அபிப்பிராயத்தை உள்ளடக்குகின்ற கணக்காய்வாளர் அறிக்கை ஒன்றை வழங்குவதும் எனது குறிக்கோள்களாக உள்ளன. நியாயமான உறுதிப்பாடென்பது உறுதிப்பாட்டின் உயர் நிலையொன்றாக காணப்படுகின்ற போதிலும் இலங்கை கணக்காய்வு நியமங்களிற்கு இணங்க மேற்கொள்ளப்படுகின்ற கணக்காய்வில் பொருண்மையான பிறழ்கூற்றொன்று காணப்படுகையில் அதனை எல்லா வேளையிலும் கண்டுபிடிக்கும் என்பதற்கு அது உத்தரவாதத்தினை வழங்குவதில்லை. பிறழ்கூற்றுக்களானவை மோசடி அல்லது தவறு காரணமாக எழக்கூடுமென்பதுடன் அவற்றுள் இந்த நிதிக்கூற்றுக்களை அடிப்படையாகக் கொண்டு பாவனையாளர்களால் மேற்கொள்ளப்படும் பொருளாதாரத் தீர்மானங்கள் மீது தனித்தனியாகவோ அல்லது கூட்டுமொத்தமாகவோ செல்வாக்குச் செலுத்தக்கூடுமென நியாயமாக எதிர்பார்க்கப்படுபவை பொருண்மையானவையாக கருத்திலெடுக்கப்படும்.

இலங்கை கணக்காய்வு நியமங்களின் பிரகாரம் கணக்காய்வின் பகுதியொன்றாக, கணக்காய்வின் போது உயர்தொழில் தீர்ப்புக்களை நான் மேற்கொண்டு உயர்தொழில் ஐயப்பாட்டினையும் பேணுகின்றேன். அத்துடன்;

- மோசடி அல்லது தவறு காரணமாக நிதிக்கூற்றுக்களிற்கு ஏற்படக்கூடிய தவறான கூற்றுக்களின் பொருண்மையான ஆபத்துக்களை இனங்கண்டு மதிப்பீடு செய்தல், அந்த இடர்களை எதிர்கொள்ளக்கூடிய கணக்காய்வு நடைமுறைகளை வடிவமைத்துச் செயற்படுத்துதல் மற்றும் எனது அபிப்பிராயத்திற்கான அடிப்படை ஒன்றினை வழங்குவதற்குப் போதியளவும் பொருத்தமானதுமான கணக்காய்வுச் சான்றுகளை பெற்றுக்கொள்ளுதல். மோசடியானது தவறான கூட்டிணைவு, தவறான ஆவணம் தயாரித்தல், வேண்டுமென்று விட்டுவிடுதல்கள், தவறான வெளிப்படுத்தல்கள் அல்லது உள்ளகக் கட்டுப்பாட்டிலான எல்லை மீறல்களை உள்ளடக்குவதால் மோசடி மூலம் ஏற்படும் பொருண்மையான பிறழ் கூற்றொன்றைக் கண்டுபிடிக்காது விடுவதால் ஏற்படும் ஆபத்தானது தவறின் மூலமான விளைவொன்றைவிடக் கூடியதாகும்.

- சந்தர்ப்பங்களிற்குப் பொருத்தமான கணக்காய்வு நடைமுறைகளை வடிவமைப்பதற்காக கணக்காய்வுடன் தொடர்புடைய உள்ளகக் கட்டுப்பாடுகள் தொடர்பான அறிவை பெற்றுக்கொள்வதற்காகவேயன்றி கம்பனியின் உள்ளகக் கட்டுப்பாடுகளின் செயற்திறன் மீது அபிப்பிராயமொன்றை தெரிவிக்கும் நோக்கத்திற்காக அல்ல.

- பயன்படுத்திய கணக்கீட்டுக் கொள்கைகளின் பொருத்தப்பாடுகளையும் கணக்கீட்டு மதிப்பீடுகளின் நியாயத் தன்மையினையும் மற்றும் முகாமைத்துவத்தால் மேற்கொள்ளப்பட்ட தொடர்புடைய வெளிப்படுத்தல்களினையும் மதிப்பீடு செய்தல்.

- பெற்றுக்கொள்ளப்பட்ட கணக்காய்வுச் சான்றுகளை அடிப்படையாகக் கொண்டு முகாமைத்துவத்தின் தொடர்ந்தியங்கும் கணக்கீட்டு எண்ணக்கரு பயன்பாட்டின் பொருத்தப்பாடுகள் தொடர்பிலும், தொடர்ந்தியங்கும் எண்ணக்கருவிற்கு அமைய தொடர்ந்து செயற்படுவதற்கு கம்பனிக்கு உள்ள ஆற்றல் தொடர்பில் குறிப்பிடத்தக்க ஐயப்பாட்டிற்கு காரணமாகவுள்ள நிகழ்வுகள் அல்லது நிலைமைகளுடன் தொடர்புடைய பொருண்மையான நிச்சயமற்ற தன்மை காணப்படுகின்றதா என முடிவிற்குவருதல். பொருண்மையான நிச்சயமற்ற தன்மை காணப்படுகின்றது என நான் முடிவுக்குவந்தால், அல்லது எனது அபிப்பிராயத்தினை மாற்றியமைப்பதற்கு அவ்வாறான வெளிப்படுத்தல்கள் போதியளவாக காணப்படாதிருக்கையில், நிதிக்கூற்றுக்களிலுள்ள வெளிப்படுத்தல்களுடன் தொடர்புபட்டுள்ள எனது கணக்காய்வு அறிக்கையின் மீது கவனம் செலுத்துதல் வேண்டும். எனது

கணக்காய்வு அறிக்கைத் திகதி வரையிலும் பெற்றுக்கொள்ளப்பட்ட கணக்காய்வுச் சான்றுகள் எனது முடிவுகளிற்கு அடிப்படையாகக் காணப்படுகின்றன. எவ்வாறாயினும், எதிர்கால நிகழ்வுகள் அல்லது நிலைமைகள் கம்பனியின் தொடர்ந்தியங்கும் நிலையினை இடைநிறுத்துவதற்கு காரணங்களாக அமையலாம்.

- வெளிப்படுத்தல்கள் அடங்கலாக நிதிக்கூற்றுக்களின் ஒட்டுமொத்த சமர்ப்பித்தல், கட்டமைப்பு மற்றும் உள்ளடக்கங்களை மதிப்பீடு செய்தல் மற்றும் நியாயமான சமர்ப்பித்தலினை நிறைவேற்றுவதற்கு அடிப்படையாகக் காணப்பட்ட கொடுக்கல் வாங்கல்கள் மற்றும் நிகழ்வுகளை நிதிக்கூற்றுக்கள் பிரதிநிதித்துவம் செய்கின்றனவா என்பதனை மதிப்பீடு செய்தல்.

தேவையானவாறு எந்த நேரத்திலும் பின்வரும் விடயங்களை பரீட்சிப்பதற்கு சாத்தியமானதாக கணக்காய்வின் நோக்கெல்லை விஸ்தரிக்கப்பட்டுள்ளது.

- கம்பனியின் செயற்பாடுகளை தொடர்ச்சியாக மதிப்பீடு செய்யக்கூடியவாறான தகவல்களை சமர்ப்பிக்கும் நோக்கில் அமைப்பு, முறைமைகள், நடைமுறைகள், ஏடுகள், பதிவேடுகள் மற்றும் ஏனைய ஆவணங்கள் முறையாகவும் போதுமானதாகவும் வடிவமைக்கப்பட்டிருந்தனவா என்பதுடன் அத்தகைய முறைமைகள், நடைமுறைகள், புத்தகங்கள், பதிவேடுகள் மற்றும் ஏனைய ஆவணங்கள் ஆக்கபூர்வமான செயற்பாட்டில் உள்ளனவா என்பதும்,

- கம்பனியின் ஆளுகை சபையால் வழங்கப்பட்ட பொருத்தமான எழுத்துமூலமான சட்டம் அல்லது ஏனைய பொதுவான அல்லது விசேட பணிப்புரைகளுடன் கம்பனி இணங்கியிருந்ததா என்பதும்,

- கம்பனி அதன் அதிகாரங்கள், தொழிற்பாடுகள் மற்றும் கடமைகளின் பிரகாரம் செயற்பட்டிருந்ததா என்பதும், மற்றும்

- கம்பனியின் வளங்கள் கால வரையறைகளினுள்ளேயும் பொருத்தமான சட்டங்களிற்கிணங்கவும் சிக்கனமாகவும் வினைத்திறனாகவும் ஆக்கபூர்வமாகவும் கொள்வனவு செய்யப்பட்டு பயன்படுத்தப்பட்டிருந்தனவா என்பதும் ஆகும்.

## 1.5 நிதிக்கூற்றுக்களின் தயாரிப்பு தொடர்பான கணக்காய்வு அவதானிப்புக்கள்

### 1.5.1 இலங்கை கணக்கீட்டு நியமங்களுடன் இணங்காமை

| | உரிய நியமம் தொடர்பாக இணங்காமை | முகாமைத்துவ கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|---|
| (அ) | இலங்கை கணக்கீட்டு நியமம் 07 இன் 7 ஆம் பிரிவின் பிரகாரம் 03 மாத முதிர்ச்சி காலத்துடனான நிலையான வைப்புக்கள் காசு மற்றும் காசிற்கு சமமானவைகளின் கீழ் காட்டப்பட வேண்டும். எனினும் 03 மாத முதிர்ச்சி காலத்துடனான ரூபா 98,130,274 பெறுமதியான நிலையான வைப்புக்கள் மீளாய்வாண்டிற்கான ரூபா 546,426,154 தொகையான ஏனைய நிதிச் சொத்துக்களின் பெறுமதியில் உள்ளடக்கப்பட்டிருந்தது. இதன் விளைவாக, காசு மற்றும் காசிற்கு சமமானவை குறைத்துக் காட்டப்பட்டிருந்ததுடன் ஏனைய நிதிச் சொத்துக்கள் அதே தொகையால் அதிகரித்துக் காட்டப்பட்டிருந்தன. | இலங்கை வங்கியின் பலவத்தை கிளையிலிருந்து பெறப்பட்ட வங்கி மேலதிகப்பற்று வசதிக்கான பிணையாக வைக்கப்பட்டுள்ள இந்த நிலையான வைப்பு நீண்டகால நிலையான வைப்பாக தெளிவுபடுத்தப்பட்டுள்ளதுடன், இந்த தவறைத் திருத்துவதற்கு நடவடிக்கைகள் எடுக்கப்படும். | நியம ஏற்பாடுகளின் பிரகாரம் நடவடிக்கைகள் எடுக்கப்பட வேண்டும். |

### 1.5.2 கணக்கீட்டுக் குறைபாடுகள்

| | கணக்காய்வு அவதானிப்பு | முகாமைத்துவ கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|---|
| (அ) | மீளாய்வாண்டின் திசெம்பர் மாதத்துடன் தொடர்புடைய சமூக பாதுகாப்பு பங்களிப்பு வரிக்காக (எஸ்எஸ்சீஎல்) 2023 சனவரி 20 இல் ரூபா 3,232,563 தொகை செலுத்தப்பட்டிருந்தது. எனினும் ரூபா 203,802 தொகை மாத்திரமே மீளாய்வாண்டின் இறுதியில் உள்ளவாறு செலுத்த வேண்டிய வரிப் பொறுப்பாக நிதிக்கூற்றுக்களில் காட்டப்பட்டுள்ளது. காசுப்பாய்ச்சல் கூற்றில் திசெம்பர் மாதம் தொடர்பாக செலுத்த வேண்டிய ரூபா 3,232,563 தொகை ரூபா 7,533,246 தொகையான செலுத்தப்பட்ட வரியில் சேர்க்கப்பட்டுள்ளது. | மீளாய்வாண்டின் திசெம்பர் மாதத்துடன் தொடர்புடைய சமூக பாதுகாப்பு பங்களிப்பு வரிக்காக (எஸ்எஸ்சீஎல்) செலுத்தப்பட்ட ரூபா 3,232,563 தொகை நான்கு அலைவரிசைகளான ஐரீஎன், வீரீவீ, லகந்தா மற்றும் வீஎவ்எம் ஆகியவற்றிற்காக செலுத்தப்பட்ட தொகையாகும். ஐரீஎன் தொடர்பான ரூபா 2,761,767 தொகை மாத்திரமே ஆண்டின் இறுதியில் ஐரீஎன் செலவினமாக கணக்கிற்கு எடுத்துக்கொள்ளப்பட்டது. அது சரியாக கணக்குகளிற்கு எடுத்துக்கொள்ளப்பட்டது என தெரிவிக்கப்பட்டது. | காசுப்பாய்ச்சல் கூற்றில் சரியான காசுப்பாய்ச்சல்கள் காட்டப்பட வேண்டும். |
| (ஆ) | மீளாய்வாண்டிற்கான ஓய்வூதிய நலன் திட்டத்தின் ரூபா 33,516,058 தொகையான தற்போதைய மற்றும் கடந்த கால சேவை கிரயத்தின் பெறுமதி மற்றும் வட்டிக் கிரயத்தின் மொத்த பெறுமதி தேறியலாபமாக இனங்காணப்பட்டுள்ளதுடன் காசுப்பாய்ச்சல் கூற்றைத் தயாரிக்கும் போது வரிக்கு முன்னரான தேறியலாபத்துடன் குறிப்பிடப்பட்ட தொகை மாத்திரமே சீர்செய்து கொள்ளப்பட வேண்டிய போதிலும் ரூபா 41,732,774 தொகை குறித்த பெறுமதி மற்றும் ரூபா 8,216,716 உண்மையான நட்டத்தை உள்ளடக்கி சீர்செய்யப்பட்டிருந்தது. | ரூபா 33,516,058 தொகையான மீளாய்வாண்டிற்கான ஓய்வூதிய நலன் திட்டத்தின் தற்போதைய மற்றும் கடந்த கால சேவைக் கிரயத்தின் பெறுமதி மற்றும் வட்டிக் கிரயத்தின் மொத்த பெறுமதி மற்றும் ரூபா 8,216,716 உண்மையான நட்டம் என்பன தேறியலாபத்தை கணிப்பிடும் போது இனங்காணப்பட்டிருந்தன. எனவே ரூபா 33,516,058 மற்றும் ரூபா 8,216,716 தொகை காசுப்பாய்ச்சல் கூற்றைத் தயாரிக்கும் போது சீர்செய்யப்பட வேண்டும். எனவே காசுப்பாய்ச்சல் கூற்றிற்கான இந்த இரண்டின் ரூபா 41,732,774 தொகையான மொத்த பெறுமதியின் சீராக்கம் சரியாக இருந்ததுடன் இது முன்னைய ஆண்டுகளில் இதே முறையில் சீர்செய்யப்பட்டது. | காசுப்பாய்ச்சல் கூற்றில் சரியான காசுப்பாய்ச்சல்கள் காட்டப்பட வேண்டும். |

### 1.5.3 இணக்கம் செய்யப்படாத கட்டுப்பாட்டுக் கணக்குகள் அல்லது ஏடுகள்

| விடயம் | நிதிக்கூற்றுக்களின் பிரகாரம் பெறுமதி ரூபா | தொடர்புடைய ஏட்டின் பிரகாரம் பெறுமதி ரூபா | வேறுபாடு ரூபா | முகாமைத்துவ கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|---|---|---|
| ஆண்டின் இறுதியில் உள்ளவாறு செலுத்தப்பட வேண்டிய பெறுமதி சேர் வரியின் மீதி | 22,550,731 | 17,390,493 | 5,160,238 | 2022 திசெம்பர் மாதத்திற்கான வான்கால பெறுமதி மீதான பெறுமதி சேர் வரி (வற்) 2023 சனவரி 20 இற்கு முன்னர் செலுத்தப்பட்ட போதிலும் 2023 இன் முதலாவது காலாண்டிற்குள் வரவு/ செலவுத்தாள்கள் மேற்கொள்ளப்பட்டன. எனவே 2022 ஆம் ஆண்டிற்கான இறுதிக் கணக்குகளைத் தயாரிப்பதற்காக விபரங்கள் ஒவ்வொரு தொடர்புடைய சீராக்கங்களை மேற்கொண்ட பின்னர் ஏட்டிலிருந்து பெறப்படுகின்றன. அதன் பிரகாரம் செலுத்த வேண்டிய மற்றும் செலுத்தப்பட்ட மீதிகளுக்கு இடையே வேறுபாடொன்று காணப்பட்டது. 2023 ஆம் ஆண்டில் குறித்த வேறுபாடு தொடர்பாக தேவையான சீராக்கங்களைச் மேற்கொள்வதற்கு நடவடிக்கைகள் எடுக்கப்படும். எனவே மேலதிக கொடுப்பனவு அல்லது குறைவான கொடுப்பனவு மேற்கொள்ளப்பட்டிருக்கவில்லை. ஒவ்வொரு வருடமும் உள்நாட்டு இறைவரித் திணைக்களத்தினால் வரிக் கணக்காய்வு மேற்கொள்ளப்பட்டு அதற்கேற்ப சரியான தொகைக்கு கொடுப்பனவு மேற்கொள்ளப்படுகின்றது என தெரிவிக்கப்படுகிறது. | சரியான மீதி காட்டப்பட வேண்டும். |

### 1.5.4 நிறுவனத்தின் தொடர்ந்தியங்கும் எண்ணக்கரு

| கணக்காய்வு அவதானிப்பு | முகாமைத்துவ கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| 2015 ஆம் ஆண்டிற்கான வலையமைப்பின் உரிமை மூலதனம் ரூபா 3,198,499,721 ஆக இருந்ததுடன் இது 2022 ஆம் ஆண்டில் ரூபா 654,161,058 வரை தொடர்ச்சியாக குறைவடைந்திருந்தது. 2016 ஆம் ஆண்டு முதல் 2022 ஆம் ஆண்டு வரை வலையமைப்பில் ரூபா 107,189,266 முதல் ரூபா 361,564,271 வரை நட்டங்கள் ஏற்பட்டிருந்தன. மீளாய்வாண்டிற்கான சுயாதீன தொலைக்காட்சி ஊடக வலையமைப்பின் நட்டம் ரூபா 284,814,228 ஆக இருந்ததுடன் சுயாதீன தொலைக்காட்சி ஊடக வலையமைப்பின் கீழ் வசந்தம் ரி.வீ., ஐரீஎன் எவ்எம், வசந்தம் எவ்எம் ஆகியவற்றால் ஏற்பட்ட நட்டங்கள் முறையே ரூபா 27,059,771, ரூபா 44,592,216 மற்றும் ரூபா 5,098,056 ஆகும். | கருத்துரை வழங்கப்படவில்லை. | வருமானத்தை அதிகரிப்பதற்கு நடவடிக்கைகள் எடுக்கப்பட வேண்டும். |

### 1.6 பெறவேண்டிய மற்றும் செலுத்த வேண்டிய கணக்குகள்

### 1.6.1 பெற வேண்டியவைகள்

| | கணக்காய்வு அவதானிப்பு | முகாமைத்துவ கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|---|
| (அ) | மீளாய்வாண்டின் திசெம்பர் 31 இல் உள்ளவாறு 22 எதிர் வணிக கடன்பட்டோரை உள்ளடக்கிய மொத்த மீதி ரூபா 28,824,030 ஆனதுடன் வலையமைப்பால் உரிய சேவை பெறப்படாததன் விளைவாக 5 ஆண்டுகளுக்கு மேற்பட்ட எதிர் வணிக கடன்பட்டோர் மீதிகளின் கூட்டுமொத்தம் ரூபா 17,288,168 ஆகும். அந்த மீதிகளை அறவிடுவதற்கு நடவடிக்கைகள் எடுக்கப்படாமல் நிதியாண்டில் எதிர் வணிக கடன்பட்டோர் மொத்த தொகையில் 51 சதவீதத்தை பிரதிநிதித்துவப்படுத்துகின்ற ரூபா 14,641,728 இற்கு நட்டக்கழிவு சீராக்கம் மேற்கொள்ளப்பட்டிருந்தது. | இந்த மீதி நீண்ட காலமாக புத்தகங்களில் உள்ளது, ஏனெனில் எதிர் வணிகத்துடன் தொடர்புடைய சேவைகளைப் பெற்றுக்கொள்வதை உறுதிப்படுத்துவதற்கு பட்டியலிட்டவாறு விலைப்பட்டியல்கள் மற்றும் ஏனைய தொடர்புடைய ஆவணங்கள் பெறப்பட்டிருக்கவில்லை. எதிர்காலத்தில் சுற்றறிக்கைகளின் பிரகாரம் அந்த நீண்ட கால மீதிகளை பதிவழிப்பதற்கு நடவடிக்கைகள் எடுக்கப்படும். | கடன்பட்டோர் மீதிகளை தாமதமின்றி அறவிடுவதற்கு நடவடிக்கைகள் எடுக்கப்பட வேண்டும். |
| (ஆ) | சுயாதீன தொலைக்காட்சி ஊடக வலையமைப்பின் சேவைநாடும் கடன்பட்டோர் மீதியில் சேர்க்கப்பட்டிருந்த 5 வருடங்களுக்கு மேற்பட்ட கடன்பட்டோர் மீதி ரூபா 182,444,875 ஆக இருந்ததுடன் வியாபார கடன்பட்டோர் மீதியில் | மேற்கூறிய அரசாங்க நிறுவனங்கள் உட்பட, அறவிடப்படக்கூடிய அனைத்துப் பணத்தையும் அறவிடுவதற்கு நடவடிக்கைகள் எடுக்கப்பட்டது. ஆவணங்கள் பரிமாற்றம் இல்லாததால் நிலுவையாக உள்ள மீதிகளின் ஒரு பகுதி உருவாக்கப்பட்டது. மேலும் | நீண்டகாலமாக முன்கொண்டுவரப்பட்ட மீதிகளை தாமதமின்றி அறவிடுவதற்கு நடவடிக்கைகள் எடுக்கப்பட வேண்டும். |

உள்ளடக்கப்பட்ட ரூபா 108,928,257 மீதி 06 அரசாங்க நிறுவனங்களால் பிரதிநிதித்துவப்படுத்தப்பட்ட 5 மில்லியனிற்கு மேற்பட்ட தொகைகளை கொண்டிருந்தது. மேலும் ஒரு மில்லியனுக்கு மேற்பட்டதும் 05 ஆண்டுகளுக்கு மேற்பட்டதுமான மீதிகளின் கூட்டுமொத்தம் ரூபா 113,797,981 ஆக இருந்ததுடன் இது 14 அரசாங்க நிறுவனங்கள் உட்பட 47 கடன்பட்டோரால் பிரதிநிதித்துவப்படுத்தப்பட்டிருந்தது. குறித்த தொகையில் ரூபா 112,439,341 கூட்டுமொத்தத்தை பிரதிநிதித்துவப்படுத்தியிருந்த 46 கடன்பட்டோர்களிற்கு எதிராக சட்ட நடவடிக்கைகள் எடுக்கப்பட்டுள்ளது.

முக்கிய முகவர்களிடம் இருந்து பெறவேண்டிவைகள் தொடர்பாக, பணத்தை அறவிட்ட பின்னர் அவர்கள் செலுத்துவார்கள் என எங்களுக்குத் தெரிவிக்கப்பட்டது. அரசாங்க நிறுவனங்களிடமிருந்து பெறவேண்டிய மீதிகளும் அதில் சேர்க்கப்பட்டன. சில அரசாங்க நிறுவனங்களில் மீதிகளை அறவிடுவதற்கு ஏற்கனவே நடவடிக்கைகள் எடுக்கப்பட்டு வருகின்றன. மேற்கூறிய மீதியில் ஏறத்தாழ ரூபா 6.5 மில்லியனை அறவிடுவதற்கு சட்ட நடவடிக்கைகள் பூர்த்தி செய்யப்பட்டன. ரூபா 26 மில்லியன் தொகைக்காக சட்ட நடவடிக்கைகளை எடுப்பதற்கு சட்டப் பிரிவுக்கு அனுப்பப்பட்ட போதிலும் சில சட்டச் சிக்கல்கள் இருந்ததுடன் பிரச்சனைகளைத் தீர்ப்பதற்கு உரிய நடவடிக்கைகள் எடுக்கப்பட்டு வருகின்றன. முக்கிய சேவைநாடுநர்களாக இல்லாத கடன்பட்டோரிற்கு எதிராக சட்ட நடவடிக்கைகள் எடுக்கப்பட்டு ஆவணங்கள் பூர்த்தி செய்யப்பட்டன. முக்கிய முகவர்கள் வலையமைப்பிற்கு தொடர்ந்து விளம்பரங்களை கொடுத்து வருவதால், அவர்களிடமிருந்து பெறவேண்டியவைகளிற்கு எதிராக சட்ட நடவடிக்கைகளை எடுக்க முடியாதிருந்தது. வலையமைப்பின் வருமானத்தில், ஏறத்தாழ 80 சதவீதம் அந்த முகவர்களால் வழங்கப்படுகிறது. 5 ஆண்டுகளுக்கும் மேலாக வலையமைப்பு மூலம் மேற்கொள்ளப்பட்ட கடன் கொடுக்கல்வாங்கல் தொகை ரூபா 21,200 மில்லியனாகும். இந்தக் காலப்பகுதியில் குறித்த தொகையில் 99.1 சதவீதம் வலையமைப்பால் அறவிடப்பட்டதுடன் 0.9 சதவீதம் மேலே விபரிக்கப்பட்டுள்ளவாறு நிராகரிக்கப்பட்டது.
அறவிடப்படக்கூடிய பணத்தை அறவிடுவதற்கு மேலதிக நடவடிக்கைகள் எடுக்கப்படும். மேலும் வலையமைப்பால் கடன் கொள்கை அறிமுகப்படுத்தப்பட்டு அது நடைமுறைப்படுத்தப்பட்டுள்ளது. அதன் பிரகாரம் முறையான ஆவணச் செயன்முறையைப் பேணுவதற்கும், முறையான

| | | |
|---|---|---|
| | மேற்பார்வையின் கீழ் விளம்பரங்களைப் பெற்றுக்கொள்வதற்கும், தாமதமின்றி சிக்கல்களைத் தீர்ப்பதற்கும் முடிந்திருந்தது. இது கடந்த இரண்டு ஆண்டுகளாக அரசாங்க நிறுவனங்களிடமிருந்து பெறப்பட வேண்டிய ஒரு சிறிய தொகை மாத்திரமேயாகும். அவற்றையும் அறவிடுவதற்கு நடவடிக்கைகள் எடுக்கப்பட்டு வருகிறது. | |

**1.6.2 செலுத்த வேண்டியவைகள்**

| கணக்காய்வு அவதானிப்பு | முகாமைத்துவ கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| (அ) 5 ஆண்டுகளுக்கு குறைவாக ரூபா 19,472,000 மீதி காணப்பட்டதுடன் 05 முதல் 10 ஆண்டுகளுக்கு இடைப்பட்ட மீதி ரூபா 15,869,506 ஆக இருந்தது. மேலும் 10 ஆண்டுகளுக்கு மேற்பட்ட ரூபா 34,360,725 மீதி நிதிக்கூற்றுக்களில் காட்டப்பட்டிருந்த ரூபா 69,702,230 பிற்போடப்பட்ட வருமானத்தில் உள்ளடக்கப்பட்டுள்ளது. எனினும், மீளாய்வாண்டிலும் அந்த மீதிகளை தீர்ப்பனவு செய்வதற்கு நடவடிக்கைகள் எடுக்கப்பட்டிருக்கவில்லை. | பணிப்பாளர் சபையின் அங்கீகாரம் மற்றும் கணக்காய்வு மற்றும் முகாமைத்துவக் குழுவின் பரிந்துரைக்கு உட்பட்டு கணக்குகளில் இருந்து பதிவழிப்பதற்கு நடவடிக்கைகள் எடுக்கப்படும். | நீண்டகாலமாக முன்கொண்டுவரப்பட்ட மீதிகளை தாமதமின்றி தீர்ப்பனவு செய்வதற்கு நடவடிக்கைகள் எடுக்கப்பட வேண்டும். |
| (ஆ) நிதிக்கூற்றுக்களில் காட்டப்பட்டுள்ள இரத்துச் செய்யப்பட்ட காசோலைகளின் மீதி ரூபா 9,758,581 ஆக இருந்ததுடன் அதில் சேர்க்கப்பட்ட ஒரு வருடத்திற்கு மேற்பட்ட 672 காசோலைகளின் பெறுமதி ரூபா 7,037,394 ஆகும். எனினும், மீளாய்வாண்டின் போதும் குறித்த மீதிகளை தீர்ப்பனவு செய்வதற்கான நடவடிக்கைகள் எடுக்கப்பட்டிருக்கவில்லை. | 2023 ஆம் ஆண்டிற்கான இறுதிக் கணக்குகளில் 3 ஆண்டுகளுக்கு மேற்பட்ட இரத்துச் செய்யப்பட்ட காசோலைகளின் பெறுமதியை தீர்ப்பனவு செய்வதற்கு நடவடிக்கைகள் எடுக்கப்படும். | இரத்துச் செய்யப்பட்ட காசோலைகளின் மீதிகளை தாமதமின்றி தீர்ப்பனவு செய்வதற்கு நடவடிக்கைகள் எடுக்கப்பட வேண்டும். |

**1.7 சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள் மற்றும் முகாமைத்துவ தீர்மானங்கள் போன்றவற்றுடன் இணங்காமை**

| சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள் போன்றவற்றுடனான தொடர்பு | இணங்காமைகள் | முகாமைத்துவ கருத்துரைகள் | பரிந்துரைகள் |
|---|---|---|---|
| (அ) 2015 மே 25 ஆம் திகதிய பிஈடி/1/2015 ஆம் இலக்க பொதுமுயற்சிகள் சுற்றறிக்கையின் 02 ஆம் பந்தி | சுற்றறிக்கை அறிவுறுத்தல்களுக்கு முரணாக உத்தியோகபூர்வ வாகனங்களுக்கு உரித்தில்லாத நடுத்தர முகாமைத்துவத்தில் உள்ள 41 உத்தியோகத்தர்களுக்கு போக்குவரத்து படிகளாக மீளாய்வாண்டின் போது ரூபா 6,524,899 தொகை செலுத்தப்பட்டுள்ளது. | பொதுப் போக்குவரத்தின் பற்றாக்குறையைக் கருத்தில் கொண்டு அமைப்பு அகவிதி மற்றும் பணிப்பாளர் சபையின் அங்கீகாரத்தின் பிரகாரம் இந்த படி செலுத்தப்பட்டது. | சுற்றறிக்கை அறிவுறுத்தல்களின் பிரகாரம் நடவடிக்கைகள் எடுக்கப்பட வேண்டும். |
| (ஆ) 2015 யூலை 14 ஆம் திகதிய 03/2015 ஆம் இலக்க பொது நிதிச் சுற்றறிக்கையின் திருத்தப்பட்ட நிதிப் பிரமாணம் 371(2)(ஆ) | ஒரு சந்தர்ப்பத்தில் வழங்கக்கூடிய செயல்நிமித்த கட்டுநிதிகளின் ஆகக்கூடிய எல்லை ரூபா 100,000 ஆக உள்ள போதிலும் ரூபா 22,790,397 தொகை பதவியணியினரிற்கு வழங்கப்பட்ட முற்பணங்கள் மற்றும் கொள்வனவிற்காக வெளித் தரப்பினருக்கு வழங்கப்பட்ட முற்பணங்கள் என குறித்த எல்லையை விஞ்சி 77 சந்தர்ப்பங்களில் செயல்நிமித்த கட்டுநிதிகளாக வழங்கப்பட்டிருந்தது. | நிதிப் பிரமாணங்களுக்கு மேலதிகமாக ஒரு குழுவால் வழங்கப்பட்ட தீர்மானத்தின் அடிப்படையில் தீர்மானிக்கப்பட்ட எல்லையின் பிரகாரம் நிதி அதிகார கையளிப்பின் அங்கீகாரத்திற்கு உட்பட்டு நிறுவனத்தின் இயல்பின் பிரகாரம் பதவியணியினர் மற்றும் வெளித் தரப்பினருக்கு முற்பணங்கள் வழங்கப்படுகின்றன. முற்பணங்கள் பணிப்பாளர் சபையால் அங்கீகரிக்கப்பட்ட எல்லைக்குள் வழங்கப்பட்டு உயர் முகாமைத்தின் அங்கீகாரத்திற்கு உட்பட்டது. | சுற்றறிக்கை அறிவுறுத்தல்களின் பிரகாரம் நடவடிக்கைகள் எடுக்கப்பட வேண்டும். |
| (இ) 2015 யூலை 14 ஆம் திகதிய 03/2015 ஆம் இலக்க பொது நிதிச் சுற்றறிக்கையின் திருத்திய நிதிப் பிரமாணங்கள் 371(2)(ஆ) மற்றும் 371(5) | பெறப்பட்ட உபகட்டுநிதிகள் சம்பந்தப்பட்ட வேலை பூர்த்தி செய்யப்பட்ட பின்னர் 10 நாட்களுக்குள் தீர்ப்பனவு செய்யப்பட வேண்டிய போதிலும் பதவியணியினரிற்கும் வெளித் தரப்பினருக்கும் வழங்கப்பட்டு மீளாய்வாண்டின் | நிகழ்ச்சித்திட்டங்களை தயாரிப்பதற்காக ஏறத்தாழ ஒரு மாத காலப்பகுதிக்கு கொழும்பிற்கு வெளியே தங்கியிருந்து நிறுவனத்திற்குத் திரும்பும் போது முற்பணங்களைத் தீர்ப்பனவு செய்வதற்கு வெவ்வேறு காலத்தை எடுத்துக்கொள்ளலாம். குறித்த காலம் | சுற்றறிக்கை அறிவுறுத்தல்களின் பிரகாரம் நடவடிக்கைகள் எடுக்கப்பட வேண்டும். |

| | | | | |
|---|---|---|---|---|
| | | இறுதியில் உள்ளவாறு 03 மாதங்களை விஞ்சியிருந்த முற்பண மீதி ரூபா 7,614,016 ஆகும். | நிகழ்ச்சித்திட்டத்தின் தன்மையில் தங்கியுள்ளது. இது பணிப்பாளர் சபையின் அங்கீகாரத்திற்கு உட்பட்டது.<br><br>உரிய திகதியில் முற்பணத்தை தீர்ப்பனவு செய்யாத நபர்களுக்கு எச்சரிக்கை கடிதங்கள் வழங்கப்பட்டு வருகைப் படியை நிறுத்துவதற்கு நடவடிக்கைகள் எடுக்கப்படுகின்றன. | |
| (ஈ) | பட்டயக் கணக்காளர்கள் நிறுவனத்தின் கூட்டிணைந்த ஆளுகையின் சிறந்த நடைமுறைகள் 2017 இன் அ.2.1 ஆம் பந்தி | 2022 செப்தெம்பர் 22 இல் நடைபெற்ற பணிப்பாளர் சபைக் கூட்டத்தின் 363/09 ஆம் இலக்க குறிப்பின் பிரகாரம் வரையறுக்கப்பட்ட சுயாதீன தொலைக்காட்சி வலையமைப்பின் பிரதம நிறைவேற்று உத்தியோகத்தர் பதவியை ஒழிப்பதற்கு பணிப்பாளர் சபை தீர்மானித்திருந்தது. எனினும், தலைவர் மற்றும் பிரதம நிறைவேற்று உத்தியோகத்தர் ஆகிய இரண்டு பதவிகளினதும் அதிகாரம் மற்றும் பொறுப்புக்கள் தொடர்பான கடமைகளை நிறைவேற்றும் விடயத்தை நியாயப்படுத்தும் வகையில், மீளாய்வாண்டிற்கான கம்பனியின் ஆண்டறிக்கையில் தகவல் குறிப்பிடப்பட வேண்டிய போதிலும் இது தொடர்பாக ஆண்டறிக்கையில் எந்த தகவலும் உள்ளடக்கப்பட்டிருக்கவில்லை. | பணிப்பாளர் சபைத் தீர்மானத்தின் பிரகாரம் பிரதம நிறைவேற்று உத்தியோகத்தர் பதவியை ஒழிப்பதற்கான அங்கீகாரத்தை பெற்றுக்கொள்வதற்காக 2022.10.25 இல் வெகுசன ஊடக அமைச்சின் செயலாளர் ஊடாக முகாமைத்துவ சேவைகள் திணைக்களத்திற்கு கடிதம் ஒன்று அனுப்பப்பட்டது. எனினும் இதுவரை எமக்கு பதில் கிடைக்கவில்லை. பிரதம நிறைவேற்று உத்தியோகத்தர் பதவியை ஒழிப்பதற்கு முகாமைத்துவ சேவைகள் திணைக்களத்தின் அங்கீகாரத்தை பெற்றுக்கொண்ட பின்னர் பணிப்பாளர் சபையின் அங்கீகாரத்தின் அடிப்படையில் தலைவர் மற்றும் பொது முகாமையாளரிடம் பிரதம நிறைவேற்று உத்தியோகத்தர் பதவியின் அதிகாரம் மற்றும் பொறுப்புக்களை கையளிப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்படும். குறித்த அங்கீகாரம் கிடைத்த பின்னர் ஆண்டறிக்கையில் தகவல்களை சமர்ப்பிப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்படும். | தகவல் ஆண்டறிக்கையில் குறிப்பிடப்பட வேண்டும். |

**1.8 காசு முகாமைத்துவம்**

| | கணக்காய்வு அவதானிப்புக்கள் | முகாமைத்துவ கருத்துரைகள் | பரிந்துரைகள் |
|---|---|---|---|
| (அ) | மீளாய்வாண்டின் இறுதியில் உள்ளவாறு வலையமைப்பால் பேணப்படும் வங்கி நடைமுறைக் கணக்கு தொடர்பான வங்கி மேலதிகப்பற்று ரூபா 92,763,071 ஆக இருந்ததுடன் மீளாய்வாண்டில் குறித்த மேலதிகப்பற்றிற்கான வட்டியாக ரூபா 9,399,978 தொகை செலுத்தப்பட்டிருந்தது. | 2022 ஆம் ஆண்டின் பொருளாதார நெருக்கடியின் கடுமையான விளைவு காரணமாக, வங்கி மேலதிகப்பற்று வசதியைப் பயன்படுத்த வேண்டியிருந்ததுடன் எதிர்காலத்தில் இதனைக் குறைப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்படும். | செலவினங்களை குறைப்பதற்கு நடவடிக்கைகள் எடுக்கப்பட வேண்டும். |
| (ஆ) | 2020 ஆம் ஆண்டிற்கான வலையமைப்பின் தொழிற்படு மூலதனம் ரூபா 620,761,280 ஆக இருந்ததுடன் அது 2021 ஆம் ஆண்டில் ரூபா 399,833,265 வரை குறைவடைந்திருந்தது. மேலும் இது மீளாய்வாண்டில் ரூபா 117,049,242 வரை குறைவடைந்திருந்தது. | கருத்துரை வழங்கப்படவில்லை. | வருமானத்தை அதிகரிப்பதற்கு நடவடிக்கைகள் எடுக்கப்பட வேண்டும். |

## 2. நிதி மீளாய்வு

### 2.1 நிதி விளைவுகள்

மீளாய்வாண்டிற்கான செயற்பாட்டு விளைவு ரூபா 361,564,271 பற்றாக்குறையாக இருந்ததுடன் அதற்கு நேரொத்த முன்னைய ஆண்டின் பற்றாக்குறை ரூபா 315,974,401 ஆக இருந்தது. ஆகையால் நிதி விளைவுகளில் முன்னைய ஆண்டிற்கான நட்டம் ரூபா 45,589,870 ஆல் அதிகரித்தமை அவதானிக்கப்பட்டது. முன்னைய ஆண்டுடன் ஒப்பிடும் போது வான்கால வருமானம் குறைவடைந்தமை மற்றும் நிகழ்ச்சித்திட்ட செலவினங்கள் மற்றும் சந்தைப்படுத்தல் செலவினங்கள் அதிகரித்தமை என்பன குறித்த நட்டத்தில் ஏற்பட்ட அதிகரிப்பிற்கு பிரதானமாக தாக்கமளித்திருந்தன.

### 2.2 முக்கிய வருமான செலவின உருப்படிகளின் போக்கு தொடர்பான பகுப்பாய்வு

2021 ஆம் ஆண்டின் வான்கால விற்பனை வருமானம் ரூபா 1,407,648,212 ஆக இருந்ததுடன் மீளாய்வாண்டின் போது இது ரூபா 1,394,668,739 ஆக இருந்தது. முன்னைய ஆண்டுடன் ஒப்பிடும் போது இது 1 சதவீதம் குறைவடைந்திருந்தது. மீளாய்வாண்டுக்கான தேறிய நிதி வருமானம் ரூபா 54,907,485 ஆக இருந்ததுடன் 2021 ஆம் ஆண்டில் இது 45 சதவீத அதிகரிப்பை பிரதிநிதித்துவப்படுத்தி ரூபா 30,410,661 ஆக இருந்தது. மேலும் 2021 ஆம் ஆண்டிற்கான நிகழ்ச்சித்திட்ட செலவினம் ரூபா 579,015,447 ஆக இருந்ததுடன் அது மீளாய்வாண்டின் போது ரூபா 503,971,809 ஆக இருந்தது. நிகழ்ச்சித்திட்ட செலவினம் 15 சதவீதத்தால் அதிகரித்துள்ளது. மீளாய்வாண்டிற்கான விற்பனைச் செலவினம் ரூபா 97,326,223 ஆக இருந்ததுடன் இது முன்னைய ஆண்டிற்கான ரூபா 87,284,911 தொகையான விற்பனைச் செலவினங்களுடன் ஒப்பிடும் போது 11 சதவீதத்தால் அதிகரித்திருந்தது. 2021 ஆம் ஆண்டிற்கான நிர்வாக மற்றும் செயற்பாட்டு செலவினங்கள் ரூபா 1,300,923,871 ஆக இருந்ததுடன் அது முன்னைய ஆண்டுடன் ஒப்பிடும் போது 1 சதவீத குறைவடைதலை பிரதிநிதித்துவப்படுத்தி ரூபா 1,282,361,160 ஆக இருந்தது.

### 2.3 விகிதப் பகுப்பாய்வு

மீளாய்வாண்டிற்கான வலையமைப்பின் திரவத்தன்மை விகிதங்கள் மற்றும் இலாபத்தன்மை விகிதங்களில் பாதகமான வேறுபாடுகள் காணப்பட்டமை அவதானிக்கப்பட்டது.

| | 2022 | 2021 |
|---|---|---|
| நடைமுறை சொத்து விகிதம் | 1.10 | 1.44 |
| விரைவு சொத்து விகிதம் | 1.07 | 1.43 |
| தேறியலாப விகிதம் | -26 % | -23% |
| உரிமை மீதான திரும்பல் விகிதம் | -54% | -32% |

## 3. செயற்பாட்டு மீளாய்வு

### 3.1 முகாமைத்துவ செயற்திறனின்மைகள்

| | கணக்காய்வு அவதானிப்பு | முகாமைத்துவ கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|---|
| (அ) | மீளாய்வாண்டின் திசெம்பர் 31 இல் உள்ளவாறு வலையமைப்பிற்கு எதிராக அவமதிப்பு இழப்பீட்டுக்காக மூன்று சட்ட வழக்குகள் தாக்கல் செய்யப்பட்டிருந்ததுடன் கோரப்பட்ட இழப்பீடு ரூபா 105,000,000 ஆகும். மேலும் இலங்கையில் ஊடகங்கள் ஊடாக திரைப்படத்தை திரையிடுதல், விநியோகித்தல் மற்றும் விற்பனை செய்தல் உரிமைகளை மீறுவதற்கு எதிராக 06 வழக்குகளும், திரைப்பட புலமைச் சொத்துரிமை தொடர்பான 06 வழக்குகளும் வலையமைப்பிற்கு எதிராக தாக்கல் செய்யப்பட்டுள்ளதுடன், கோரப்பட்ட இழப்பீடு முறையே ரூபா 490,000,000 மற்றும் ரூபா 20,325,000. ஆக இருந்தன. ஏனைய விடயங்களிற்காக வலையமைப்பிற்கு எதிராக நான்கு சட்ட வழக்குகள் தாக்கல் செய்யப்பட்டிருந்ததுடன் மீளாய்வாண்டில் அந்த வழக்குகளுக்காக ரூபா 1,350,052 தொகை செலவிடப்பட்டிருந்தது. | வலையமைப்பு மூலம் செய்திகளை ஒளிபரப்புவதற்கு எதிரான இரண்டு வழக்குகளும் திரைப்படத் திரையிடல் உரிமை மீறலுக்கு எதிரான ஒரு வழக்கும் மூன்றாம் தரப்பினரால் தாக்கல் செய்யப்பட்டதுடன் இது தொடர்பாக ஒரு சமரசத்திற்கு வருவதற்கு நடவடிக்கைகள் எடுக்கப்படும். எனினும், நாங்கள் திரைப்பட வழங்குநர்களுடன் ஏற்படுத்திக்கொண்ட உடன்படிக்கையின் பிரகாரம் வலையமைப்பிற்கு எதிராக மூன்றாம் தரப்பினர் வழக்குத் தாக்கல் செய்யும் போது, சட்டக் கட்டணங்கள் உட்பட வலையமைப்பிற்கு ஏற்பட்ட அனைத்து சேதங்களையும் இழப்பீடாக அவர்கள் செலுத்த வேண்டும். | செலவினங்களை குறைப்பதற்கு நடவடிக்கைகள் எடுக்கப்பட வேண்டும். |

### 3.2 செயற்பாட்டு செயற்திறனின்மைகள்

| கணக்காய்வு அவதானிப்பு | முகாமைத்துவ கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| மீளாய்வாண்டின் இறுதியில் உள்ளவாறு 28 சந்தைப்படுத்தல் நிறைவேற்றுநர்கள் வலையமைப்பில் பணிக்கமர்த்தப்பட்டுள்ளதுடன் அதில், அவர்களுக்கு மாதந்தம் வழங்கப்பட்ட விற்பனை இலக்குகளில் 50 சதவீதம் கூட ஜரீனன் அலைவரிசையின் 12 | நாட்டில் நிலவிய மின்வெட்டு, போராட்டம் மற்றும் பொருளாதார நெருக்கடி காரணமாக இந்த சந்தைப்படுத்தல் இலக்குகளை அடைந்துகொள்ள முடியாதிருந்ததுடன் சேவைநாடுநர்களால் விளம்பரம் வெட்டப்பட்டிருந்ததுது. எனினும், | சந்தைப்படுத்தல் இலக்குகளை அடைந்து கொள்வதற்கு நடவடிக்கைகள் எடுக்கப்பட வேண்டும். |

| | | |
|---|---|---|
| உத்தியோகத்தர்களால் பெரும்பாலான மாதங்களில் அடைந்து கொள்ளப்பட்டிருக்கவில்லை. ஆண்டின் போது லகந்த வானொலியில் ஒரு பெண் உத்தியோகத்தரால் 20 சதவீதம் கூட அடைந்துகொள்ளப்பட்டிருக்கவில்லை, மேலும் ஏனைய உத்தியோகத்தர்களால் சில மாதங்களில் 50 சதவீதம் கூட அடைந்து கொள்ளப்பட்டிருக்கவில்லை. | சந்தைப்படுத்தல் நிறைவேற்றுநர்களின் செயற்திறனை நேர்முகப்பரீட்சை மூலம் மதிப்பிடுவதற்கும் ஒப்பந்த உடன்படிக்கைகளை புதுப்பிப்பதற்கும் நடவடிக்கை எடுக்கப்படும், மேலும் பலவீனங்களைக் கண்டறிந்த பின்னர் பலவீனங்களைத் தவிர்ப்பதற்கு எழுத்து மூலம் அவர்களுக்குத் தெரிவிக்கப்படும். 2023 இல் இலக்கை தொடர்ந்து அடைந்துகொள்ளாத சந்தைப்படுத்தல் நிறைவேற்றுநர்களின் ஒப்பந்த உடன்படிக்கைகளை இரத்துச் செய்வது குறித்து பரிசீலிப்பதற்கு நடவடிக்கைகள் எடுக்கப்படும். | |

### 3.3 விளைவற்ற அல்லது குறைப்பயன்பாடுடைய ஆதனம், பொறி மற்றும் உபகரணம்

| கணக்காய்வு அவதானிப்பு | முகாமைத்துவ கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| (அ) வலையமைப்பால் 2015 ஆம் ஆண்டில் ரூபா 1,588,500 இற்கு கொள்வனவு செய்யப்பட்ட Hot Swappable Power Distribution இறாக்கை மற்றும் 2010 ஆம் ஆண்டில் ரூபா 1,218,274 இற்கு கொள்வனவு செய்யப்பட்ட Aros Flexus FT – 30 30KVA UPS முறைமைகள் என்பன முறையே கொள்வனவு செய்யப்பட்ட திகதியிலிருந்தும் 4 ஆண்டு காலப்பகுதியிலிருந்தும் பயன்படுத்தப்படாமல் விளைவற்றிருந்தன. | இது தொடர்பாக Hot Swappable Power Distribution இறாக்கையானது ஏனைய தொடர்புடைய உபகரணங்களுடன் நிறுவப்பட்டிருந்த போதிலும் அரசாங்கத்தின் இறக்குமதிக் கட்டுப்பாட்டுக் கொள்கை மற்றும் நிறுவனத்தின் நிதி நெருக்கடி போன்ற காரணங்களால் அதனை செயற்படுத்த முடியாதிருந்தது.<br><br>இடி புயல் காரணமாக 30 KVA UPS முறைமை செயலிழந்ததுடன் காப்புறுதி இழப்பீட்டை பெற்றுக்கொள்வதற்கு 1½ வருடத்திற்கு மேற்பட்ட காலம் எடுத்திருந்தது. மேலும் இறக்குமதி கட்டுப்பாடுகள் காரணமாக ஏறக்குறைய ஒரு வருட காலப்பகுதி கடந்திருந்தது. எனினும் தற்போதைய டொலர் நெருக்கடியால், தேவையான உதிரிப் பாகங்களை பெற்றுக்கொள்ள முடியாதிருந்தது. | சொத்துக்களை முறையாக பயன்படுத்துவதற்கு நடவடிக்கைகள் எடுக்கப்பட வேண்டும். |

**3.4 பெறுகை முகாமைத்துவம்**

| கணக்காய்வு அவதானிப்பு | முகாமைத்துவ கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| வலையமைப்பிற்கு பாதுகாப்பை வழங்குவதற்காக ரக்னா ஆரக்சக லங்கா கம்பனி லிமிட்டட்டுடன் கைச்சாத்திடப்பட்ட ஒப்பந்த உடன்படிக்கையின் செல்லுபடியாகும் காலம் 2015 சனவரி 31 ஆம் திகதியுடன் காலாவதியாகியிருந்ததுடன், மீளாய்வாண்டு வரை உடன்படிக்கையை புதுப்பிப்பதற்கு நடவடிக்கைகள் எடுக்கப்பட்டிருக்கவில்லை. சபைப் பத்திரங்கள் மூலம் அங்கீகாரத்தை பெற்றுக்கொள்வதன் மூலம் மாத்திரமே சேவை பெறப்பட்டிருந்தது. ரக்னா ஆரக்சக லங்கா கம்பனி லிமிட்டட் பாதுகாப்பு சேவையை பெற்றுக்கொள்வதற்காக பணிப்பாளர் சபையின் அங்கீகாரம் பெறப்பட்டது. | பணிப்பாளர் சபையின் அங்கீகாரம் கிடைத்ததால் உடன்படிக்கையை புதுப்பிப்பதற்கு நடவடிக்கைகள் எடுக்கப்பட்டிருக்கவில்லை. எனினும் 2023 ஆம் ஆண்டில் உடன்படிக்கையை புதுப்பிப்பதற்கு நடவடிக்கைகள் எடுக்கப்படும். | சேவைகளைப் பெற்றுக் கொள்வதற்கான உடன்படிக்கைகள் முறையாக கைச்சாத்திடப்பட வேண்டும். |

**3.5 மனித வள முகாமைத்துவம்**

| | கணக்காய்வு அவதானிப்புக்கள் | முகாமைத்துவ கருத்துரைகள் | பரிந்துரைகள் |
|---|---|---|---|
| (அ) | மீளாய்வாண்டில் ஒப்பந்த அடிப்படையில் நான்கு ஊழியர்களும், நாளாந்த அடிப்படையில் இரண்டு ஊழியர்களும் வலையமைப்பால் ஆட்சேர்ப்பு செய்யப்பட்டிருந்ததுடன் 49 ஊழியர்கள் அங்கீகரிக்கப்பட்ட பதவியணியினரை விஞ்சி பணியில் ஈடுபடுத்தப்பட்டுள்ளனர். மேலும் அங்கீகரிக்கப்பட்ட பதவியணியினரில் உள்ளடக்கப்பட்டிருக்காத 102 நிரந்தர ஊழியர்களும், நாளாந்த அடிப்படையில் 02 ஊழியர்களும் தனிப்பட்ட முறையில் வைத்திருப்பவர்கள் என்ற அடிப்படையில் பணிக்கமர்த்தப்பட்டுள்ளனர். மேலும் மீளாய்வாண்டின் இறுதியில் உள்ளவாறான அங்கீகரிக்கப்பட்ட பதவியணியினரில் உள்ளடக்கப்பட்டிருந்த நிரந்தர பதவியணியினரின் வெற்றிடப் பதவிகளிற்காக 66 ஊழியர்கள் ஒப்பந்த அடிப்படையில் பணிக்கமர்த்தப்பட்டிருந்தனர். | 2023.01.03 ஆம் திகதிய கணக்காய்வு அத்தியட்சகரால் சமர்ப்பிக்கப்பட்ட மாதிரி வடிவத்தின் பிரகாரம் பதவியணி விபரங்கள் வழங்கப்படுகின்றன என தெரிவிக்கப்பட்டுள்ளது. | நிரந்தரப் பதவியணியினரின் வெற்றிடங்களை நிரப்புவதற்கு நடவடிக்கைகள் எடுக்கப்பட வேண்டும். |
| (ஆ) | தாபன விதிக்கோவையின் IV ஆம் அத்தியாயத்தின் பத்தி 3.3 ஆம் பந்தியின் பிரகாரம் அங்கீகரிக்கப்பட்ட நிரந்தரப் பதவியணியினரில் உள்ளடக்கப்பட்டிருந்த பதவியொன்றிற்காக நிரந்தர அடிப்படையில் நிரப்பப்படும் வரை அமைய அடிப்படையில் உத்தியோகத்தர் ஒருவரை ஆட்சேர்ப்பு செய்வதைத் தவிர்க்க வேண்டிய போதிலும் மீளாய்வாண்டின் இறுதியில் உள்ளவாறு வலையமைப்பினால் அமைய அடிப்படையில் 33 உத்தியோகத்தர்கள் ஆட்சேர்ப்பு செய்யப்பட்டுள்ளனர். | முகாமைத்துவ சேவைகள் திணைக்களத்தால் அங்கீகரிக்கப்பட்ட பதவியணியினரிற்குள்ளும் ஆட்சேர்ப்பு திட்டத்தின் அடிப்படையிலும், இந்த ஊழியர்களின் சேவையானது சேவையின் தேவைப்பாட்டின் அடிப்படையில் பெறப்பட்டது. | அங்கீகரிக்கப்பட்ட பதவியணியினரின் வெற்றிடங்களை நிரப்புவதற்கு நடவடிக்கைகள் எடுக்கப்பட வேண்டும். |